# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2016 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2016.05.16 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கம் (SLACD)
## (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கத்தைக் (SLACD)**
**கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) துஷிதா விஜயமான்ன அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 13.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

**இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கம்** (SLACD)
**(கூட்டிணைத்தல்)**

## இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கத்தைக் (SLACD) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கம்" (SLACD) என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களினால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும், பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இற்றைவரை இலங்கையில் நிறுவப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் நிறுவப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கம் (SLACD) (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்பலாம். சுருக்கப்பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போதைய இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கத்தின் (SLACD) தற்போதைய (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும் இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை ஆட்களும், "இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கம் (SLACD)" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரு கூட்டிணைக்

இலங்கை சிறுவர் அபிவிருத்தி சங்கத்தைக் (SLACD) கூட்டிணைத்தல்.

கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலா மென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என் பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன் படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்து வமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான நோக்கம்.*

3. SLACD யின் பிரதான நோக்கமானது,

(அ) சிறுவர் அபிவிருத்தி, தொடர்பாடல், தொழில்சார் அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றை உயர்த்துவதனை மேம்படுத்தல், அதற்கு வசதிசெய்து கொடுத்தல் மற்றும் ஆதரவு அளித்தல் ;

(ஆ) சிறுவர் அபிவிருத்தி மற்றும் சிறுவர்களிடையே காணப் படும் விருத்தி ஒழுங்கீனங்கள் என்பன தொடர்பான ஆராய்ச்சி, அக்கறை என்பவற்றை முன்னெடுத்துச் செல்லல், மேம்படுத்தல், அதற்கு வசதிசெய்து கொடுத்தல் மற்றும் ஆதரவு அளித்தல் ;

(இ) சிறுவர் அபிவிருத்தி மற்றும் விருத்தி ஒழுங்கீனங்களை கொண்டிருக்கும் சிறுவர்களின் நலன் என்பவற்றை மேம்படுத்துவதற்கு முயற்சித்தல் ;

(ஈ) விருத்தி ஒழுங்கீனங்களை கொண்டிருக்கும் சிறுவர் களினதும், மற்றைய சிறுவர்களினதும், அவர்களது குடும்பங்களினதும், வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்துகொள்வதற்காக குரல் கொடுத்தல் மற்றும் பிறவும்;

(உ) அறிவு மற்றும் திறன்களை உயர்த்தல், ஆதரவு அளித்தல், மேம்படுத்தல் மற்றும் அதற்கு வசதிசெய்துகொடுத்தல் ;

(ஊ) சிறுவர் அபிவிருத்தி மன்றம் அவர்களிடம் காணப்படும் விருத்தி குறைபாடுகளுக்கான ஆராய்ச்சிகளை முன்னெடுத்துச் செல்லல் ;

(எ) SLACDயானது இந்நோக்கங்களை சிறுவர்களுடைய நலன்களுக்காகவும் அவர்களது குடும்பம் மற்றும் சமூக நலன்களுக்காகவும் உதவுதல்.

SLACD ஆனது மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பணத்தை அன்பளிப்புக்களை பெற்றுக்கொள்ளவும் அதனைப் பயன்படுத்தவும் வைத்துக்கொள்ளவும் முடியும்.

SLACD ஆனது எவ்வித துஷ்பிரயோகங்களையும் மேற்கொள்ளாது, மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவே செயற்படும். இதற்கென வழங்கப்படுகின்ற வளங்கள் தனிநபருக்காகவோ அல்லது அலுவலருக்காகவோ பயன்படுத்தப்படமாட்டாது. இது தவிர SLACD ஆனது தமது சேவைகள் மற்றும் பகிர்ந்தளிப்புக் கட்டணங்களை நியாயமான முறையில் செலுத்துவதற்கு அதிகாரபூர்வமாக மேம்படுத்துகிறது. மேலும் SLACD இனால் உருவாக்கப்பட்ட இவ்விதிமுறைகள் ஏனைய ஏற்பாடுகளுடன் கூட்டுசேராமல், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் SLACD ஆம் பிரிவின்கீழ் வருமான வரி இலக்கம் விலக்கு மாநகராட்சியில் இலக்கம் 19 பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், SLACD இன் எந்தவொரு நடவடிக்கையும் SLACDஇன் நோக்கத்தை பெருக்குவதற்காகவோ அல்லது மேம்படுத்துவதற்காகவோ மேற்கொள்ளப்படவில்லை. SLACDயும் அதன் அங்கத்தவர்களும் குறித்த நோக்கங்களின் அடிப்படையில் தனிநபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களினதும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் சட்டங்களை இயற்றும், SLACD ஆனது எவ்வித அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்றவோ, தலையிடவோ (அறிக்கைகள் பகிர்ந்தளிப்பு மற்றும் பிரசுரித்தல் உட்பட) பொது அலுவலகங்களின் சார்பாக எவ்வித ஆட்சேர்ப்புகளுக்கான அத்தகைய எல்லா செயற்பாடுகளும் உறுப்புரை ஈ இல் பிரிவு IIஇல் விபரிக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுதல் ஆகாது.

**4.** (1) ஐந்து வகையான உறுப்பினர்கள் உள்ளனர். ஆயுட்கால அங்கத்தவர்கள், சாதாரண உறுப்பினர்கள், வெளிநாட்டு அங்கத்தவர்கள், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் இணை உறுப்பினர்கள். அனைத்து உறுப்பினர்களும் கூட்டங்களுக்கு உறுப்புரிமை.

சமுகமளிக்க உரிமையுடையவர்கள். இணை உறுப்பினர்களைத் தவிர அனைத்து உறுப்பினர்களும் வாக்களிக்கும் உரிமையுடையவர்கள். அலுவலகம் வைத்திருக்கும் உரிமை SLACD யின் ஆயுட்கால உறுப்பினர்களுக்கும் சாதாரண உறுப்பினர்களுக்கும் மட்டுமே உரித்துடையதாகும். சாதாரண, இணை மற்றும் வெளிநாட்டு உறுப்பினர்களுக்கான வருடாந்த உறுப்புரிமை சந்தாப் பணம் SLACD யின் சபை உறுப்பினர்களினால் நிர்ணயிக்கப்படும். ஒருமுறை செலுத்தவேண்டிய ஆயுட்கால உறுப்புரிமைக்குரிய சந்தாப்பணமும் சபை அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்படும்.

(2) சாதாரண மற்றும் ஆயுட்கால உறுப்பினர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகள் பின்வருமாறு :-

(அ) இலங்கைப் பிரசையாயிருத்தல் ;

(ஆ) பட்டப்பின்படிப்பு பட்டம்பெற்ற வைத்தியத்துறை உறுப்பினர்கள், சிறுவர் அபிவிருத்தி மற்றும் விருத்தி குறைபாடு தொடர்பான துறையில் வேலைசெய்பவராகவும், அத்துறையில் தேர்ச்சியும் ஆர்வமும் உடையவராயுமிருத்தல் வேண்டும். அத்துடன் SLACD யின் நோக்கங்களுடன் தொடர்புடையதாக அவரது செயற்பாடுகள் இருத்தல் வேண்டும் ;

(இ) பொருத்தமான பட்டப் பின்படிப்பு பட்டம்பெற்ற ஏனைய தனிநபர்கள், சிறுவர் அபிவிருத்தி மற்றும் விருத்தி குறைபாடு தொடர்பான துறையில் வேலைசெய்பவராகவும், அத்துறையில் தேர்ச்சியும் ஆர்வமும் உடையவராயுமிருத்தல் வேண்டும். அத்துடன் SLACD யின் நோக்கங்களுடன் தொடர்புடையதாக அவரது செயற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

(ஈ) இளமாணி பட்டம் மற்றும் அனுமதிக்கப்பட்ட தகைமையுடைய ஏனைய தனிநபர்கள் அவர்களுடைய ஆர்வத்தை வேலையில் காட்டுபவராகவும் சிறுவர் அபிவிருத்தி, விருத்தி குறைபாடு தொடர்பான துறையில் வேலை

செய்பவராகவும், அத்துறையில் தேர்ச்சியும் ஆர்வமும் உடையவராயுமிருத்தல் வேண்டும். அத்துடன் SLACD யின் நோக்கங்களுடன் தொடர்புடையதாக (அவர்கள் தற்போது இருக்கின்ற நிறுவனத்தின் தலைவரின் சிபாரிசுக்கு அமைவாக) அவரது செயற்பாடுகள் இருத்தல் வேண்டும்.

*கௌரவ உறுப்பினர்கள் கொண்டிருக்கவேண்டிய தகுதிகள் பின்வருமாறு.-* வைத்தியத்துறையில் உள்ளவர்களும் அல்லது விஞ்ஞானம் தொடர்பான கற்கைநெறித் துறையில் சிறப்புத் தேர்ச்சிபெற்றவர்களும் SLACD இன் உறுப்பினராக முடியும். ஏனெனில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் விருத்தி குறைபாடு தொடர்பான துறையில் வேலைசெய்பவராகவும், அத்துறையின் கற்கைநெறி பரிகாரம் மீதான அவர்களது விஷேட தகைமை அறியத்தரும் திறனே இதற்கு காரணமாகும்.

*வெளிநாட்டு உறுப்பினர்கள் கொண்டிருக்கவேண்டிய தகுதிகள் பின்வருமாறு.-* வைத்தியத்துறையில் உள்ளவர்களும் அல்லது விஞ்ஞானம் தொடர்பான கற்கைநெறித் துறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களும் கலாநிதி பட்டம்பெற்றவர்களும், சிறுவர் அபிவிருத்தி மற்றும் விருத்தி குறைபாடு தொடர்பான துறையில் வேலைசெய்பவராகவும், ஆர்வமுடையவர்களாகவும் SLACDஇன் நோக்கங்களுடன் தொடர்பு உள்ளதாக அவரது செயற்பாடுகள் இருத்தல் வேண்டுமென்பதுடன் மேலும் வெளிநாட்டில் வசிப்ப வராக, வெளிநாட்டவராக இருத்தல் வேண்டும்.

*இணை உறுப்பினர்கள் கொண்டிருக்கவேண்டிய தகுதிகள் பின்வருமாறு.-* பட்டப்பின்படிப்பில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள வைத்திய தொழில்செய்பவர்கள் இணை உறுப்பினராக முடியும்.

(3) அனைத்து விண்ணப்பங்களும் SLACD யினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் செயலாளரிடம் அல்லது இதற்கென நியமிக் கப்பட்டவரிடம் கையளிக்கப்படல் வேண்டும். பிரிவு 4(3)இல் குறிப்பிடப்பட்டவாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சிபாரிசு

செய்யப்படல் வேண்டும். SLACD செயலாளரால் விண்ணப்பப் படிவங்கள் தனித்தனியாக மீளாய்வு செய்யப்பட்டு SLACD இற்கு தகுந்தவரா என கௌன்ஸிலுக்கு சிபாரிசு செய்யப்படும். அதற்கான இறுதி முடிவை கௌன்ஸில் மேற்கொள்ளும்.

*(4)* SLACD இன் ஒருவராலோ அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களாலோ ஒருவரது அங்கத்துவம் மறுக்கப்பட்டால் அல்லது ஆட்சேபிக்கப்பட்டால், குறித்த நபரை மறுப்பதற்கான காரணத்தை எழுத்துவடிவில் 30 நாட்களுக்குள் சபையில் சமர்ப் பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாதவிடத்து ஆட்சேபனை மீளப் பெற்றுக்கொண்டதாக கருதப்படும். சபைக்கு எழுத்துமூலம் மறுப்புரை வழங்கப்பட்டால் SLACD இன் தலைவரால் நியாயமான முறையில் கருத்திற்கொள்ளப்பட்டு பரிசீலனை செய்வார். ஆட்சேபனைகளை சிலசமயம் சபை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அவ்விண்ணப்பதாரிக்கு அந்த ஆட்சேபனையை மீளாய்வு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படும். எவ்வாறாயினும் உறுப்புரிமைக்கான விண்ணப்பம் செயலாளரிடம் அல்லது அவரது பிரதிநிதியிடம் விண்ணப்பித்த 120 நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம் அல்லது ஏற்றுக்கொள்ளப்படாம லிருக்கலாம்.

(5) வருடாந்த பொதுக்கூட்டத்திற்குரிய இடமும் நேரமும் SLACD சபையினால் தீர்மானிக்கப்படும். அந்த கூட்டத்தை நடத்துவதை கூட்டத்தில் முன்வைக்கப்படுகின்ற அலுவல்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பானதாகும். சில சமயங்களில் இங்கு விஞ்ஞானம் சம்பந்தமான அமர்வுகளும் இடம்பெறலாம். வருடாந்த பொதுக்கூட்டத்தின்போது புதிய உறுப்பினர்கள் அறிமுகம் செய்யப்படுவர்.

*(6)* SLACD சபையின் வேண்டுகோளின் 15 உறுப்பினர்களின் அல்லது அதற்கு அதிகமானோரின் வேண்டுகோளினால் SLACD இன் தலைவரினால் விசேட கூட்டம் கூட்டப்படலாம்.

(7) கூட்டம் நடைபெறவிருக்கும் திகதி, இடம், கூட்டம் நிகழும் நேர இடைவெளி, விசேட கூட்டமாயின் அதற்கான குறித்த காரணம், கூட்டம் கூடுவதற்கான குறிக்கோள் அல்லது நோக்கம் பற்றிய

எழுத்துமூலமான அறிக்கை SLACD இன் சபை அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் SLACD இல் பதிவுசெய்யப்பட்டிருக்கும் முகவரிக்கு தனிப்பட்டரீதியாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது ஏனைய எழுத்து வடிவிலான தொடர்பாடலூடாக 5 தொடக்கம் 60 நாட்களில் தகவல் அனுப்பப்படல் வேண்டும். இலங்கைத் தபால்நிலையத்தின்மூலம் அனுப்பப்படும் தகவல் தாமதமாகுமானால், குறித்த அங்கத்தவரின் தற்காலிக முகவரிக்கு தகவல் அனுப்பப்படல் வேண்டும்.

(8) சிறுபான்மை வணிக பரிவர்த்தனையில் SLACD இன் ஏனைய கூட்டங்களின்போது சபை பெரும்பான்மையானோர் உட்பட குறைந்தது 10 சதவீதமாவது வாக்களிக்கப்பட்ட உறுப்பினர்கள் இப்பரிவர்த்தனையின் அங்கத்தவர்களாக பதிவுசெய்யப்படுவர். பெரும்பான்மை அங்கத்தவர்களின் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் முறையாக அழைத்து ஒன்றுகூட்டப்பட்ட கூட்டத்தில் சிறுபான்மையோரின் வருகையின்போதே ஒத்திவைக்கப்படல் வேண்டும். அழைக்கப்பட்ட கூட்டத்திற்கு வருகைதந்த உறுப்பினர்கள் சார்பற்ற சிறுபான்மையினரின் பரிவர்த்தனையானது முடிவுகளுக்கு இணக்கம் தெரிவிக்கவில்லையாயின் தீர்மானங்கள் ஒத்திவைக்கப்படும்.

(9) ஏதேனுமொரு நடவடிக்கை அல்லது தீர்மானமொன்று கூட்டமொன்றைக் கூட்டாது எடுக்கப்படுமாயின், அது சட்ட ஒழுங்குவிதிமுறைக்கு கீழ்ப்பட்டதாகவும், மேலும் குறித்த தீர்மானம் பற்றி அனைத்து உறுப்பினர்களினதும் தனிப்பட்ட அல்லது ஒன்றிணைந்த எழுத்துமூல உறுப்புரிமைக் கடிதமொன்றும் இணைக்கப்படல் வேண்டும். பெறப்பட்ட அக்கணமே குறித்த படிவமானது கோப்பிலிடப்படல் வேண்டும். ஒருமித்த இவ்வாக்குமூலமானது, கூட்டமொன்றின்மூலம் இடம்பெறும் விளைவையே கொண்டிருக்கும்.

(10) SLACD இன் பெயர் பதிவுப் புத்தகமொன்றில், இணை அங்கத்தவர்கள், வெளிநாட்டு அங்கத்தவர்கள், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் ஏனைய எல்லா உறுப்பினர்களினதும் பெயர்கள் மற்றும் அவர்களது முக்கிய தரவுகளைக் குறித்து செயலாளர்கள்,

குறித்த புத்தகத்தை பராமரித்தல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட குறித்த அங்கத்தவரின் தகவல்களில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமாயின், குறித்த அந்நபர் பொறுப்புதாரராகவும் மாற்றம் செய்யப்பட்ட திகதி, முகவரி போன்ற அனைத்து தகவல்களையும் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

*அங்கத்துவத்தை இரத்துச் செய்தல்.*

**5**. சபையின் பரிந்துரையின்படி குறித்த ஒருநபரின் அங்கத்துவம் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டுமாயின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குகொள்ளும் நான்கில் மூன்று வீதமானோரின் (3/4) உறுதியான வாக்களிப்புமூலம் குறித்தநபரின் அங்கத்துவம் பறிமுதல் செய்வதற்கான தகுந்த காரணத்தை தெரிவித்து எழுத்துமூல பிரதியொன்றை SLACD இற்கு சமர்ப்பிப்பதுடன் குறித்தநபரின் தனிப்பட்டரீதியாக அல்லது மின்னஞ்சலினூடாக தற்கால முகவரிக்கு 90 நாட்களுக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் அவரது நிலுவை மீதிகள் மற்றும் செலுத்துமதிகள் அனைத்தும் குறித்த ஒரு திகதியில் SLACD இன் சபைக் கூட்டத்தின்போது தீர்வு செய்யப்படும்.

(2) குறித்த ஆண்டிற்கான அங்கத்துவ கட்டணத்தை எந்தவொரு அங்கத்தவராயினும் செலுத்தவில்லையாயின் நடைமுறையாண்டின் மாச்சு மாதம் 31 ஆம் திகதி குறித்த நபரின் அங்கத்துவமானது இரத்து செய்யப்படும். உறுப்பினரால் நடைமுறையாண்டின் அங்கத்துவ கட்டணமும் நிலுவை மீதிகளும் செலுத்தப்பட்டவுடன் அங்கத்துவமானது மீண்டும் புதுப்பிக்கப்படும்.

(3) SLACD இன் எந்தவொரு உறுப்பினரும் 2 வருட கால வரையறுக்கப்பட்டவாறு விடுமுறைக் கோரிக்கையினை சபைக்குத் தெரிவிக்கலாம். குறித்த உறுப்பினரின் கோரிக்கையின்படி விடுமுறைக்கால இடைவெளிக்குள்ளான கட்டண தள்ளுபடிகள் அனைத்தும் சபைக்குச் செலுத்தப்படும். மேலும் விடுமுறைக்கான நீடிப்பினை அதிகரிக்க வேண்டுமாயின் அது உறுப்பினர்களின் விடுமுறை நீடிப்பு கோரிக்கையினை ஒப்படைக்க வேண்டும். மேற்படி விருப்புக்கள் சபையால் தீர்மானிக்கப்படும்.

*கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்.*

**6**. (1) SLACD இனால் வழங்கப்படும் விதிமுறைகள் தவிர்ந்த, ஏனைய அனைத்து அதிகாரங்களும், சொத்துக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் SLACD இன் சபையினால் நடாத்தப் படும்.

(2) சபையானது 15 அங்கத்தவர்களைக் கொண்டதாகும். வாக்களிப்பினால் தெரிவு செய்யப்பட்ட SLACD இன் (7) ஏழு உறுப்பினர்கள் தலைவர், உபதலைவர், (President elect) 2 இணைச் செயலாளர்கள், பொருளாளர், உதவிப் பொருளாளர் (2) மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் ஓய்வு பெற்ற SLACD இன் (2) இரண்டு தலைவர்கள், பொது அங்கத்துவம் பெற்ற (4) உறுப்பினர்கள் சுகாதார அபிவிருத்திப் பணிகளில் மீண்டும் சமுகமளிக்க தயாராயிருக்கும் இருவர் (2) மற்றும் வாக்கு மூலமின்றி இருவர் இலங்கை குழந்தை மருத்துவர் மற்றும் சமூகச் சூழல்நல மருத்துவர் பகுதியிலிருந்து பரிந்துரைக்கப்பட்டு நியமிக்கப்படுவர்.

(3) உறுப்புரிமை ஆண்டு பொதுக்கூட்டத்தில், பொது உறுப் பினர்களால் பரிந்துரைக்கப்பட்டு அதிக வாக்களிப்புக்களை பெற்று 15 உறுப்பினர்கள் கவுன்ஸிலின் அங்கத்தவர்களாக நிய மிக்கப்படுவர். மேலும் வாக்குமூலமின்றி இருவர் இலங்கை குழந்தை மருத்துவர் மற்றும் சமூகச் சூழல்நல மருத்துவர் பகுதியிலிருந்து பரிந்துரைக்கப்பட்டு நியமிக்கப்படுவர்.

(4) கவுன்ஸிலின் அங்கத்தவர்கள் 2 வருட கால இடைவெளிக் குள் பதவியிலிருப்பார். இவரது பதவிக்காலம் முடிந்தவுடன் இவரை மீண்டும் அப்பதவிக்கு நியமிக்க முடியாது.

(5) எந்தவொரு வேட்பாளராயினும் பதவிக்குப் போட்டியிடு வதற்கு ஆகக்குறைந்தது 2 வருடம் SLACD இன் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

(6) கவுன்ஸிலினால் கூட்டப்படும் எந்தவொரு கூட்டத்தின் போதும் கவுன்ஸிலின் அதிகப்படியான விருப்பு வாக்குகளின் மூலம் கவுன்ஸிலின் உறுப்பினர் நீக்கப்பட்டு உறுப்பினர்களின் வெற்றிடத்தை நிரப்ப அக்கூட்டத்திலே புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(7) பொதுக்கூட்டத்தின் போது அல்லது விசேட கூட்டத்தின் போது கவுன்ஸிலின் விதிமுறைகளுக்கேற்ப குறுகிய கால இடை வெளியில் பதவியிலிருந்து நீக்கப்பட்ட உறுப்பினர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படும். வழங்கப்படும் இப்பதவியானது குறித்த பதவிக்கால முடிவின்போது முடிவிற்குக் கொண்டு வரப்படும்.

(8) கவுன்ஸிலினால் ஆகக் குறைந்தது மாதத்திற்கு இருமுறையாயினும் கூட்டமானது ஒழுங்கு செய்யப்படும். சில கூட்டங்கள் முன்னறிவித்தலின்றி திடீரென வணிக பரிவர்த்தனை மூலம் ஒழுங்கு செய்யப்படலாம். ஆனால் கவுன்ஸிலின் கூட்ட நிகழ்வு நடைபெறும் திகதி, இடம், நோக்கம் போன்ற அனைத்து விடயங்களும் தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஆகக் குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் குறித்த கூட்டமொன்று நிகழவிருப்பதாக திகதி, இடம், நோக்கம் உள்ளடக்கிய முன்னறிவித்தல் ஒன்றை கவுன்ஸிலின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

(9) சிறுபான்மை வணிக பரிவர்த்தனையானது அதிகமாக SLACD இன் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். இப்பரிவர்த்தனையின அங்கத்தவர்களாக பதிவு செய்யப்படுவர். பெரும்பான்மை அங்கத்தவர்களின் நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் முறையாக அழைத்து ஒன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் சிறுபான்மையோரின் வருகையின் போதே ஒத்திவைக்கப்படல் வேண்டும். அழைக்கப்பட்ட கூட்டத்திற்கு வருகை தந்த உறுப்பினர்கள் சார்பற்ற சிறுபான்மையினரின் வணிக பரிவர்த்தனையானது முடிவுகளுக்கு இணக்கம் தெரிவிக்கவில்லையாயின் தீர்மானங்கள் ஒத்திவைக்கப்படும்.

(10) குறித்த பரிவர்த்தனை பரிமாற்றல் நிகழ்வுகள் சபையினால் அனைத்து உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்புக்களின் மூலம் அல்லது கூட்டாக எடுக்கப்பட்ட முடிபின் மூலம் பரிவர்த்தனைக்குழுவின் முன் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் கூட்டம் இடம்பெறும் அதே நேரம் தள்ளுபடிகள் மற்றும் பிற்போடல்கள் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் சீர்செய்யப்பட்ட பின்னரே குறித்த பரிவர்த்தனை சபையினால் அங்கீகரிக்கப்படும்.

(11) சட்ட ஒழுங்குகளின்கீழ் கவுன்ஸிலினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அல்லது அனுமதிகள் போன்றன அனைத்து உறுப் பினர்களின் தனிப்பட்ட விருப்பங்களின் மூலம் அவசரகால முடிவுகளுக்கான கூட்டமானது சபையினால் ஒழுங்குசெய்யப்படும். ஒப்புதல்கள் மற்றும் வாக்குமூலங்கள் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் குறிக்கப்படும். ஒழுங்காக கூட்டப்பட்ட கூட்டத்தின் சக்தியை அல்லது விளைவையே இக்கூட்டம் கொண்டிருக்கும்.

(12) கவுன்ஸிலினால் கூட்டப்படும் விசேட கூட்டமானது தலைவரினால் அல்லது அனைத்து கவுன்ஸில் உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்புக்களின் பேரில் ஒழுங்கு செய்யப்படவிருக்கும் கூட்டம் நடைபெறும் இடம் மற்றும் நேரம் உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்படும்.

(13) கூட்டம் நடைபெறவிருக்கும் திகதி, இடம் பற்றிய எழுத்து மூலமான அறிக்கை சபை அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் SLACD இல் பதிவுசெய்யப்பட்டிருக்கும் முகவரிக்கு தனிப்பட்ட ரீதியாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது ஏனைய எழுத்து வடிவிலான தொடர்பாடலாக தகவல் அனுப்பப்படும். அவ்வாறு குறித்த இடம் குறிப்பிடாவிடில் வழமையாக சபைக் கூட்டம் நடைபெறும் இடத்தில் கூட்டம் இடம்பெறும். ஆகக்குறைந்தது 72 மணித்தியாலங்களுக்கு முன்னதாகவே இந்த முன்னறிவித்தல் அறிவிக்கப்படல் வேண்டும்.

(14) SLACD இன் சபை ஒன்று கூடல் நிகழ்விற்காக சமுக மளிக்கும் ஒவ்வொரு சபை அங்கத்தவர்களும் சபையினால் எடுக் கப்படும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கான தீர்மானங்களுக்கும் சம்மதம் அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும் அதிகாரமுண்டு. சபையின் தீர்மானங்கள் திருப்தியளிக்காவிடில், குறித்த முடிவுகளுக்கான மாறுபட்ட கருத்துக்களை அக்கூட்ட நிகழ்வின்போதே முன்வைத்தல் வேண்டும். சபையில் தனது கருத்துக்களைப் பகிராத பட்சத்தில் சபை செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்து கூட்டத்தை ஒத்திவைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். அவ்வாறு முரண்பட்ட கருத்துக்கள் எழாத சந்தர்ப்பங்களில் குறித்த தீர்மானம் விருப்பு வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

(15) அனைத்து காரியாலய அதிகாரிகளும் அலுவலர்களும் SLACD இனால் ஒன்று கூட்டப்படும் வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது பொது அங்கத்தவர்களின் அதிக பட்ச வாக்களிப்பைப் பெற்று தெரிவு செய்யப்படுவர்.

(16) SLACD இன் தலைவர், தலைமை செயற்குழு அதிகாரியாகக் காணப்படுவார் அத்துடன் SLACD சபையின் செயற்பாடு களையும் மேற்பார்வையிடுவார், மேலும் SLACDஇன் வணிக மற்றும் ஏனைய விவகாரங்களையும் கண்காணிப்பார். SLACD இன் அனைத்து கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவதுடன், அதன் அனைத்து தீர்மானங்கள் மற்றும் ஏனைய சபையினால் நேரத்திற்கு நேரம் எடுக்கப்படும் வேலைகளுக்கும் பொறுப்புதாரியாகவும் இருப்பார். தலைவரானவர் SLACD இன் பங்குகள் அனைத்திற்கும் அல்லது ஏதேனுமொன்றிற்கோ ஆதரவாக வாக்களிக்க வேண்டும். இல்லையேல் ஆதரவு வழங்க வேண்டும். தலைவரானவர் பதவி வழி உறுப்பினராகவும் வாக்களிக்கும் உறுப்பினராகவும் அனைத்து இயங்கும் குழுக்களிலும் இருப்பதோடு சபையினால் குறிப்பிடப்படும் பொதுவான அதிகாரமுடையவராகவும் அனைத்துப் பணிகளையும் செய்யக்கூடியவராக இருப்பார். குறித்த தலைவர் MD அல்லது PhD பட்டங்களைக் கொண்டிருத்தல் அவசியம்.

(17) தலைவர் சமுமளிக்காவிடில் அல்லது செயலாற்ற முடியாத சந்தர்ப்பங்களில் உப தலைவர் தலைவரின் அதிகாரத்தைப் பெற்று, உப தலைவரானவர் தலைவருக்கு அடுத்து அனைத்து அதிகாரமுடைய பதவிவழி உறுப்பினராகவும் வாக்களிக்கும் உறுப்பினராகவும் அனைத்து இயங்கும் குழுக்களிலும் இருப்பதோடு சபையினால் குறிப்பிடப்படும் பொதுவான அதிகாரமுடையவராகவும் அனைத்துப் செயற்பாடுகளையும் செய்வதோடு குறித்த கட்டுப்பாடுகளையும் பேணிக்கொள்ளல் வேண்டும். உபதலைவர் MD அல்லது PhD பட்டங்களைக் கொண்டிருத்தல் அவசியம்.

செயலாளரானவர்,-

(அ) சம்பந்தமான அனைத்து அறிக்கைகளையும் ஆவணங்களையும் பேண வேண்டும் ;

(ஆ) அனைத்து அறிவிப்புக்களையும் ஒழுங்கு முறையில் மற்றும் சட்ட விரோதமற்ற முறையின்கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும் ;

(இ) பொதுவாக, செயலாளருக்குரிய அனைத்து செயற்பாடுகளையும் மற்றும் நேரத்திற்கு நேரம் தலைவரால் வழங்கப்படும் பணிகளையும் சரியாக நிறைவேற்றல் வேண்டும்.

(18) பொருளாளராக நியமிக்கப்பட்டவர் SLACD இன் வணிக கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களை ஒழுங்குமுறையிலும் பிழையின்றி சரிவரப் பராமரித்தலும், சேகரித்து கோவைப்படுத்தலும் வேண்டும் அத்தோடு, சொத்துக்கள் பொறுப்புக்கள் வரவுத் தாள் மற்றும் செலவுத் தாள், இலாப நஷ்டக் கணக்குகள் போன்றவற்றையும் உள்ளடக்கி ஆவணப்படுத்தல் வேண்டும். மேலும் இதுகுறித்த ஆவணங்கள்யாவும் சபை அங்கத்தவர்கள் எந்நேரத்திலும் பார்வையிடக்கூடியதாகவிருத்தல் அவசியம். பொருளாளர் SLACD இன் நிதி வளங்களான சபையின் அங்கத்துவப்பணம் மற்றும் உதவிப்பணங்கள் அனைத்தும் SLACD இன் வங்கிக் கணக்கில் வைப்பிலிடல் வேண்டும். SLACD இன் அனைத்து நிதி நிலைமைகள் தொடர்பாகவும் தலைவருக்கும் சபைக்கும் அறியப்படுத்துவதோடு சபையில் நிதி தொடர்பாக தலைவருக்கும்சபைக்கும் அறியப்படுத்துவதோடு சபையில் நிதி தொடர்பாக எழும் கேள்விகளின்போது கணக்குகள் பற்றிய சரியான பதிவேட்டை தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் சபையின் நிர்வாகம் தொடர்பாக சீரான இயக்கத்திற்கு உறுதுணையாகவும் பொறுப்பாகவும் இருத்தல் வேண்டும்.

(19) சபையின் அதிகாரியொருவரை பதவியிலிருந்து நீக்கப்படக் கூடிய அதிகாரத்தை மூன்றில் இரண்டு (2/3) சபை அங்கத்துவ வாக்கெடுப்பு தீர்மானிக்கின்றது. சபையில் ஏதேனும் வெற்றிடங்கள் ஏற்பட்டால் கூட்டங்களின்போது வெற்றிடங்கள் யாவும் நிரப் பப்படும்.

குழுக்கள்.

**7**. செயற்பாட்டுக்குழுவானது, வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட SLACD இன் அதிகாரிகளையும் முன்னாள் பதவி யிலிருந்த அதிகாரிகள் இருவரையும் கொண்ட அமைப்பாகும். தலைவரானவர், அவையை சீரான செயற்படக்கூடியவராகவும் கொண்டமைக்கப்படும். இக்குழுவானது முக்கிய சபைக் கூட்டங் களின் இடைநடுவே கூடி அவசரகால முடிவுகள் பற்றியும் சபையி னால் ஒத்திவைக்கப்படும் விடயங்கள் தொடர்பாகவும் கலந்தா லோசிப்பதாக காணப்படும். மேலும் இக்குழுவின் செயற்பாடுகள் சபையின் பின்னேற்றத்திற்கு வகைசொல்லக்கூடியதாகவும் காணப்படும். SLACD இன் நிலைக்குழு அங்கத்தவர்கள் சபையினால் தெரிவுசெய்யப்பட்டு அல்லது வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படல் வேண்டும். SLACD இற்கு அப்பாற்பட்ட விடயங்களையும் SLACD இன் அபிவிருத்தித் தடைகள் பற்றிய தடுமாற்றங்களையும் சீர்செய்து செயற்படல் வேண்டும்.

அனைத்து சங்கங்களும், சங்க உறுப்பினர்களும் தனது முறைப் பாடுகளை நேரடியாகவே சபைக்கு தெரிவிக்கலாம். அவ்வாறில் லாதுவிட்டால் சபை நேரடியாகவே முறைப்பாடுகளை மேற்பார்வை யிட்டு கையேற்கலாம்.

கூட்டுத்தாப னத்தின் நிதியம்.

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்திற்காகவும் அதன் தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக்கொடை, நன்கொடை, ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணங்களும், சபை யினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப் படக்கூடியவாறான எல்லாப் பணங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.*

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும் ;

(2) கூட்டுத்தாபனமானது கூட்டுத்தாபனத்தின் எல்லா வரவு செலவுகளினதும், சொத்துக்கள் பொறுப்புக்களினதும் மற்றும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் சரியான கணக்குளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய் வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் சபையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவருமாகிய தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) அதன் வதிவிடப் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருக்கின்றவர்களும் மற்றும் அத்தகைய நிறுவகத்தின் சபையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழொன்றைக் கொண்டிருக்கின்றவர்களுமான, பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனங்கள்.*

***10***. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவையுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் முகாமைக்குழு உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

***11***. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர் அல்லது முகாமைக் குழு தீர்மானிக்கக்கூடியவாறான கூட்டுத்தாபனத்தின் வேறு இரு அங்கத்தவர்களின் முன்னிலையிலன்றி எச்சாசனத்திலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

***12***. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது எவரேனும் ஆட்களது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***13***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்